அஸ்ஸாம் மலைவாழ்வினரை அச்சுறுத்துகிறார்

Phone No. 4502 | விலை அணா ஒன்று | Regd. No. M. 5458 | [இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்தகம்)

மலர் 1] சென்னை (30—11—49) வெளியீடு (1—12—49) [இதழ் 104

ஆச்சாரியார்!

இந்தியாவோடு இணையாவிடில் அழிந்துபடுவீரென 'சாபம்'!

ஐரோப்பிய 'மாடலில்' இங்கு உருவாகும் புது ரக ஏகாதிபத்யம்

இந்தியாவோடு இணைந்திருக்கும் திராவிடம் கண்ட பலன் என்ன?

"இந்திய சர்க்காருடன் சேர்ந்திராவிட்டால், நீங்கள் காப்பாற்ற விரும்பும் பழக்க வழக்கங்களெல்லாம் பாழாகிவிடும். நீங்கள் பாதுகாக்க விரும்பும் நிலங்களெல்லாம் பறி போய்விடும்.

"சீனா, திபேத்தை மிரட்டுகிறது; பர்மா இப்போதைக்கு ஒன்றும் பட வழியில்லை. ஆனால் இந்தியா ஸ்திரப்பட்டு விட்டது. இது உங்களையும் உங்கள் குடும்பங்களையும் காப்பாற்றும். இதுதான் உங்களுக்கு என் புத்திமதி; இந்தியாவுடன் சேர்ந்திருப்பதே உங்களுக்கு நல்லது."

ஷில்லாங்கில், மலை ஜாதியினரிடையே பேசியபோது தோழர் ராஜகோபாலாச்சாரியார் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

சூழ்நிலையைச்சுட்டிக்காட்டி நீங்கள் இந்திய சர்க்காருடன் சேர்ந்தால்தான் பிழைப்பீர்கள், இல்லையேல் பாழாய்ப் போய்விடுவீர்கள் என்று அந்த மலை ஜாதியினரை மிரட்டுகிறார் தோழர் ஆச்சாரியார்!

மலை ஜாதியினர் இந்திய சர்க்காருடன் சேருவது பற்றியோ, சேராதது பற்றியோ நமக்குக் கவலையில்லை. ஆனால், இந்திய சர்க்காருடன் சேர்ந்திருந்தால்தான் வாழ்வு, இல்லையேல் தாழ்வு என்று அச்சுறுத்துவது எவ்வகையில் சரி என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

"ரஷ்யா ஆக்கிரமிப்பு கொள்கையைப் பின்பற்றுகிறது. அந்த ஆபத்தினின்றும் நீங்கள் தப்ப வேண்டுமானால் பிறகு ஐரோப்பியநாடுகளின் கூட்டுறவிலே பங்குகொண்டாக வேண்டும்" என்று அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளை மிரட்டுவதற்கும் இந்திய சர்க்கார் இந்தியாவின் மற்றப் பகுதிகளைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதற்கும் என்ன வித்தியாசம்?

அதுபோலவே பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வலத்தில் பங்கு கொள்ளாத நாடுகள் பொருளாதாரத்துறையில் முன்னேற இயலாது என்று பிரிட்டன் சொல்லிக்கொண்டிருப்பதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

சரி, ஆச்சரியார் அறிவுரைப்படியே பார்த்தாலும் இந்திய சர்க்கார் மாகாணங்களுக்கு எந்த விதத்தில் பாதுகாப்பளிக்கிறதென்பதைக் கவனிக்க வேண்டாமா? எல்லா அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக்கொண்டு, மாகாணங்கள் தனக்கு அடிபணிந்து வாழ வேண்டும் என நினைக்கிறது மத்திய சர்க்கார். மத்திய சர்க்காரின் இந்த எண்ணத்துக்கு இடங்கொடுத்தால்தான் மாகாணங்கள் வாழ முடியுமென்றால் அப்படிப்பட்ட வாழ்வு ஒரு வாழ்வா என்று கேட்கிறோம். அப்படிப்பட்ட வாழ்வுடையோருக்கு யார் எஜமானராக இருந்தால்தான் என்ன என்று தானே நினைக்கத் தோன்றும்.

எனவே, ஆச்சாரியார் கருத்து அமெரிக்க, பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை. ஆச்சாரியார் சொல்லுவது போல இந்திய பகுதிகள் அயலார் படையெடுப்பிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணம் இந்திய சர்க்காருக்கு இருக்குமானால் பாதுகாப்பு விஷயத்தில் மட்டுமே மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்தலாமே யன்றி

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

ஜார்-ரசபுட்டின் "சொச்சம்" தலை நீட்டுகிறது!

அன்று விரட்டப்பட்ட அலெக்சாண்டர் இன்று வாய் திறக்கிறார்!

1917-ல் 100 நாள் காலம் ரஷ்யப் பிரதமராயிருந்து, போல்ஷ்விக்குகளின் கையில் அதிகாரம் வந்துற்றதும் ஆட்சி பீடத்திலிருந்து இறக்கப் பெற்ற அலெக்ஸாண்டர் கெரன்ஸ்கி (68) நவ. 27-ந் தேதியன்று லண்டனிலிருந்து வானொலி மூலம் கம்யூனிஸ்டுகளைப் பலபடத் தாக்கியுள்ளார்.

'சோவியத் கம்யூனிஸ்டுகள் நெருப்போடு விளையாடுகின்றனர்' என்று குறிப்பிட்டார் ரஷ்யாவின் முன்னாள் பிரதமர்.

"இந் நெருப்புப் பற்றி கொழுந்து விட்டெரியத் தொடங்குமேல், ரஷ்யாவே அத்தீக்குப் பலியாவது உறுதி. நாகரிக உலகந்தான் மிஞ்சும்" என்று அவர் குறிப்பிட்டார்.

அலெக்ஸாண்டர் கெரன்ஸ்கி பதவியிலிருந்து இறக்கப்பட்டு இன்று, 32 ஆண்டுகளாகின்றன. இது நாள்வரை அவர் வாய்திறவாமலே யிருந்தார். பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளிலெல்லாம் சென்று வதிந்து வந்தார்.

இவ்வாண்டு துவக்கத்தில் தான், அவரும் இன்னும் நாடு கடத்தப்பெற்ற 24 ரஷ்யர்களும் சேர்ந்து யூனியனொன்று நிறுவியுள்ளனர். ரஷ்ய மக்களுக்கு விடுதலையளிப்பதே இந்த யூனியனின் கொள்கையாம்.

ஆந்திர மாகாணப் பிரிவினை

தனி ஆந்திரமாகாணமொன்றுக்கான அரசியல் பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமாக இந்திய சர்க்காரிடமிருந்து சென்னை சர்க்காருக்குத் தகவல் வந்திருப்பதாகத் தெரிகிறது. மந்திரி சபையில் டிசம்பர் 6-ந் தேதிய கூட்டத்தில் அது ஆலோசிக்கப்படுமென அறியப்படுகிறது.

ஆந்திரமாகாணம் பிரிக்கப்பட்டதும், சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிக்கப்படுமென்றும் ஒன்றில் ஆந்திர எம். எல். ஏ. க்கள், மற்றொன்றில் ஏனையோருமிருப்பரென்றும் தெரிகிறது.

இப்படிப் பிரிவுபடும் இருகட்சிகளும் தனித்தனியே கூடி தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமாம்.

"சீனப் பிரச்னையில் கை வைக்கவேண்டாம்"!

:0:

ஐ. நா. அரசியல் கமிட்டியில் அமெரிக்காவின் தீர்மானம்

'சீனப்பிரச்னையில் கைவைக்காதிருக்கும் கொள்கையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் பொதுவாக மேற்கொள்ளலாமென்று யு. எஸ். பிரதிநிதி நவ. 28-ந் தேதியன்று ஐ. நா. சபையில் எடுத்துரைத்தார். சீனக் கம்யூனிஸ்டர்களுக்கு உதவியதின் மூலம் யால்டா ஒப்பந்தத்தை மீறியிருக்கிறது ரஷ்யா என்று அவர் கவலைப்பட்டார்.

அமெரிக்கப் பிரதிநிதி டாக்டர் பிலிப் ஜெஸப் இக்கருத்தடங்கிய ஐந்து வல்லரசுத்தீர்மானமொன்றை, ஐ. நா. அரசியல் கமிட்டியில் கொண்டுவந்தார். சோவியத் யூனியன் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

டிட்டோவை ஆதரித்து பிரிட்டனில் சங்கம்

லண்டன்: டிட்டோவை ஆதரிக்கும் யூகோஸ்லாவ் நண்பர்கள் சங்கம் ஒன்று இங்கே மாஸ்கோவின் ஆதிக்கமுள்ள கம்யூனிஸ்ட் கண்ட்ரோல் சங்கத்துக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் ஆதரிப்பு கொள்கைக்காக பிரிட்டிஷ் தொழிற்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பார்லிமெண்ட் மெம்பர் கொனிஸ்லியாக்கஸ் சங்கத்தின் நிர்வாக கமிட்டியில் இடம் பெற்றிருக்கிறார். இதில் சில பார்லிமெண்ட் மெம்பர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

—ராய்ட்டர்

தோல்வியுண்டும் படலத்தின் முதல் கட்டம்!

பிர்க்கா அபிவிருத்திஇலாகாப்பற்றி சர்க்கார்முடிவு

இப்போது தனியாக இருந்துவரும் பிர்க்கா அபிவிருத்தி இலாகாவை, ஸ்தலஸ்தாபன இலாகாவோடு சேர்த்து இணைந்துவிடுவதென, சென்னை சர்க்கார் முடிவு செய்து விட்டனராம். இதற்குக் காரணம் வெறென்றும் அப்படி அதிசயிக்கத்தக்கது அல்லவாம்! பிர்க்கா அபிவிருத்தித் திட்டங்களையொட்டிய வேலைகளை ஸ்தலஸ்தாபன இலாகாவேத் திறம்படச் செய்யலாமென்று இப்போது 'கண்டுபிடிக்கப்பட்டிருப்பதே' இதற்குப் காரணமாம். இப்படி இணைக்கப்பட்டுவிடுவதால், பிர்க்கா அபிவிருத்தி வேலைக்கெனத் தனி இலாகாவோ காரியதரிசியோ, இனி இருக்கப்போவதில்லையென்று கூறப்படுகிறது.

இப்படிச் செய்வதால, இப்போது மேற்படி இலாகாவில் ஆள் குறைப்போ, செலவுகுறைப்போ, சிறிதளவு மிராதென்று அறிவிக்கப்படு

திருமணத்துக்கு அவர் காட்டிய காரணம்!

மனைவி வளர்த்த பூனைகளால், அவளுடன் நிம்மதியாக வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்ற காரணத்தைக் காட்டி பிரிட்டிஷ் சினிமா நடிகர் ஒருவர் திருமணத்தை அனுமதி பெற்றுவிட்டார்.

பூனைகள் படுக்கையில் வந்து படுத்து விடுகின்றனவென்றும்; மேஜை நாற்காலிகளில் தம் நகங்களால் கீறல் விழச் செய்து விடுகிறதென்றும், சாப்பிடும் உணவில் வாயை வைத்து விடுகிறதென்றும், அதன் தொல்லைகளை பொறுக்க முடியவில்லை என்றும் இரண்டு மூன்று பூனைகளையாவது ஒழித்து விடும்படித் தான் எவ்வளவோ கேட்டும் அதற்கு மனைவி செவி சாய்க்கவில்லை என்றும் ஆகவே திருமணரத்தைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

—ராய்ட்டர்

சொந்த விவகாரங்களில் நிறைந்த அதிகாரம்

: (O) :

ஸ்காட்லாந்து கன்சர்வேட்டிவ்கள் வற்புறுத்தல்

தனது சொந்த விவகாரங்களில் ஸ்காட்லாந்துக்கு, மேலும் அதிகப்படியான அதிகாரங்களும் ஆதிக்கமும் இருத்தல் வேண்டும், அதற்கான சட்டங்கள் தீட்டவேண்டுமென்பதாக ஸ்காட்லாந்து கன்சர்வேட்டில் கட்சியினர் வலியுறுத்துகின்றனர். இதற்குத் தோழர் சர்ச்சில் ஆதரவு இருப்பதாகக் கூறப்படுகிறது.

அரிசி விலை குறையும்

அரிசியின் சில்லறை விலையில் 6 சதவிகிதம் குறையலாம் என்றும், இந்தக் குறைப்பு, சப்ளை மந்திரிக்கு ... என்றும் உணவு மந்திரி தேசாய் ... பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

மாலை மணி

சென்னை 30—11—49 புதன்கிழமை

மொழிவழிப் பிரிந்து இனவழி இணையட்டும்

ஆந்திரம், மொழிவழி மாகாணமாக, அடுத்து வரும் ஜனவரித் திங்கள் 26ம் நாளிலிருந்து, உருப்பெற்று விளங்கும் என்ற நம்பிக்கைக் கருத்தைச் சென்னை பிரதமர் வெளியிட்டுள்ளார். ஆந்திரம் தனி மாகாணமாகப் பிரிவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு சென்னை அரசாங்கத்தைதுக்கு மத்திய அரசாங்கம்கடிதம் மூலம்தெரிவித்திருப்பதாக பிரதமர் நவின்றுள்ளார் அதற்கான ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசிக்க, சென்னை மந்திரி சபை, டிசம்பர் 6-ம் நாள் கூடுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மொழிவழி மாகாணம் பிரிந்து நிற்க வேண்டும் என்ற கருத்தில், யாருக்கும் மாறுபாடு இருக்க இடமில்லை. இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மொழிவழி மாகாணங்கள் அனைத்தும் ஒரே இந்திய ஆட்சியின் கீழ் அமையவேண்டும் என்று காங்கிரஸ் வாதிகள் வாதிட்டு நிற்கின்றனர். திராவிடக் குழுமொழி மாகாணங்களாக அமையும் தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னடகம் ஆகிய நான்கும் ஒரு கூட்டாட்சியின் கீழ் அமைந்தால், பொருளாதாரத்தில் சீர்பெற வழி ஏற்பட முடியும் என்று திராவிட நாட்டுப் பிரிவினை கேட்கும் நாம் முழங்குகிறோம். மொழிவழி ஆந்திரம் பிரிந்து நிற்கப் போகிறதென்றால், தெலுங்கு மொழிவழங்கும் பகுதிதான், அதில் இணைந்திருக்கவேண்டுமே யொழிய, தமிழகப்பகுதி எவ்விதத்திலும் அதில் இணையக்கூடாது என்று தமிழர்களும்; கர்னடகத்தின் பகுதி அதில் சேர்ந்திருந்தால் ஆகாது என கன்னடியர்களும் கூறுகிறார்கள். இந்த உண்மையான-ஒழுங்கான நேர்மையான கருத்தை ஏற்றுக்கொள்ள ஆந்திரத் தலைவர்களில் சிலர் மறுக்கின்றனர்; மறுப்பதோடு மட்டும் நின்று விடாமல், அபத்தக் காரணங்கள் ஆயிரங்களை கொட்டி அளந்து, தமிழகத்தின் ஒரு பகுதியையும் கர்னடகத்தின் ஒரு பகுதியையும் வௌவிக் கொள்ள தம் பேராசை நாக்கை நீட்டிப் பார்க்கின்றனர். தமிழ் வழங்கும் நாட்டின் ஒரு சிறு பகுதி கூட ஆந்திர மாகாணத்திலோ கேரளமாகாணத்திலோ, கர்னடக மாகாணத்திலோ இணைக்கப்படக் கூடாது; அதற்கு மாறாக நடைபெறும் முயற்சியை முறியடிக்கத் தமிழர்கள் முற்பட்டுத்தான் தீரவேண்டும். [illegible] ஆவலெல்லாம் மோதுதலில்லாமல், நீதிநெறி வழிநின்று, மொழிவழி மாகாணங்கள் பிரியவேண்டுமென்பதே யொழிய, தமிழரின் மொழிவழி உரிமையைப் பறிக்க ஆந்திரரோ அல்லது அவரல்லாதவரோயாரேனும் முயலுவார்களாயின் அப்பொழுதும் தமிழர்கள் 'கண்மூடி மௌனி'களாக இருக்க வேண்டும் என்பதல்ல. பிரச்சினை தீர நட்பு வழியைக் கையாளுவோம், போர் முறை வேண்டாம் என்றுதான் அதிக ஆசை பிடித்தலையும் ஒரு சில ஆந்திரத் தலைவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

சென்னையின் மீது அவர்கள் வைத்த வேண்டாத ஆசையை அவர்களால் குறைத்துக் கொள்ள முடியவில்லை. ஏதேதோ பிதற்றுகின்றனர். சென்னை தமக்குக் கிட்டாது என்று தெரிந்தவுடன், அதன் சீரழிவைக் காணுவதிலே ஆசைகொள்ளும் அளவுக்கு அவர்கள் உள்ளத்திலே பொறாமை குடியேறி விட்டது, அதனல்தான். சென்னையையும் அதனைச்சேர்ந்த சுற்று வட்டாரத்தையும் தனி மாகாணமாக்க வேண்டும் என்றும், அதனை மத்திய ஆட்சியின் கீழ் வைக்க வேண்டும் என்றும், சென்னையே ஆந்திரத் தலைநகராகவும் இருக்கவேண்டும் என்றும் இவ்வாறு பலப்பல ஏமாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட எண்ணங்களாக வெளியிடுகின்றனர். இவ்வாறான எண்ணங்கள் தமிழர்க்கும்-ஆந்திரர்க்கும் இடையே இருந்த நட்பு முறை மேலும் மேலும் கெடுவதற்கு வழி செய்வனவாக ஆகுமேயல்லாது, இருவர்க்கும் நல்வாழ்வு தருவனவாக அமையா. இதை உணர்ந்து ஆந்திரர்கள் விவேகத்துடன் நடந்துகொள்ளுதல் நல்லது.

ஆந்திரர்களின் விருப்பப்படி தனி ஆந்திர மாகாணம் ஏற்பட வழி பிறந்து விட்டது அந்தக்கொள்கையைஈடேற்றி, திராவிடக் கூட்டாட்சியை நிறுவ ஆந்திரர்கள் பாடுபட்டால்தான் எதிர்காலத்தில் இனிய பொருளாதார வாழ்வு ஏற்பட வழியுண்டாகும்.

சென்னை தமிழகத்தின் தலைநகராகத்தான் விளங்க முடியும்; விளங்கவேண்டும். ஆந்திரத்திற்கு ஏற்ற தலைநகரை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதுதான், மொழி வழி மாகாணச் செயல்கள் இனிது நடைபெற இடமளித்ததாகும். சென்னையையே ஆந்திரத்தின் தலைநகராக நிலையாகக் கொள்வதோ அல்லது தற்காலிகமாகக் கொள்வதோ தமிழர் ஆந்திரரின் மனக் கசப்பை மேலும் மேலும் வளர்ப்பதாகத்தான் முடியும்.

எனவே ஆந்திர மாகாணத்தைப்பிரிக்கும் முயற்சியில் ஈடுபடும் சென்னை மந்திரி சபை, தெலுங்கு வழங்கும் பகுதி மட்டுமே ஆந்திரத்தில் சேரவும் ஆந்திரத்திலேயே அதற்கொரு தலைநகர் காணவுமான ஏற்பாடுகளைச் செய்ய ஏற்றபடி திட்டம் தீட்டும் என்று நம்புகிறோம்.

விரைவில் திராவிடத்திலுள்ள சமஸ்தான ஆட்சிகளை ஒழித்து, அவற்றின் பகுதிகளை சென்னை மாகாணத்தோடு சேர்த்து, மொழி வழி மாகாணங்களாகத் தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னடகம் ஆகியவற்றைப் பிரித்து, தனிக் கூட்டாட்சி நாடாகக் காண திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் பாடுபட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளில், ஆந்திரம் மொழி வழி பிரிவதும் ஒரு ஏற்பாடாக அமைந்திருக்கிறகாரணத்தால்தான் அது பற்றி நாம் வற்புறுத்துகிறோம். மொழி வழி மாகாணங்கள் நான்கும் தத்தம் பகுதிகளில் தமக்கேற்ற தலைநகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, திராவிடத்தின் கூட்டாட்சி அமையும்போது, திராவிடத்தின் தலைநகராகச் சென்னையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறந்ததாகும். அப்பொழுது மொழி வழி உரிமைப்படி தமிழர்க்கும், திராவிட நாட்டின் வழி பெறும் உரிமைப்படி நான்கு பகுதிகளுக்கும் தலைநகராக விளங்கும் பெருமையை சென்னை ஒருசேர பெறக்கூடும். ஆந்திரம் மொழி வழி பிரிந்து இனவழி இணைந்தால், திராவிடம் ஈடும் எடுப்புமில்லா நிலப் பகுதியாக மாறும் என்பதில் ஐயமில்லை. அதனைச் செய்ய ஆந்திரர்கள் முன் வருவார்களாக!

காஷ்மீர் பிரச்னைபற்றி பாக் அரசுப்பிரதிநிதி

லண்டன்: பாதுகாப்பு சபையில் இந்தியா உறுப்பினராக இருப்பதால், அதன்முன்பு காஷ்மீர் பிரச்னை வரும்போது இந்தியாவிற்கு சாதகமான நிலைமையிலேயே இருக்கும் என்று பாகிஸ்தானின் அரசுப்பிரதிநிதி மூகல்டாக்அமத் குர்மானி குனோப் நிருபரிடம் கூறினார்.

பாதுகாப்பு சபையில் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்றும் இதை இந்தியா பயன்படுத்திக் கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் மக்களின் வாக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்கிற கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கின்றன. சமரசான நிபந்தனைகளில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு நீங்கிவிட்டால், பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு விதி ஏற்பட்டுவிடும். இந்த சமரச ஷரத்துக்களை நிர்ணயிக்கவேண்டியது பாதுகாப்புசபையின் கடமை அல்லது மத்தியஸ்தத்திற்கு இந்தியாவை உடன்படும்படியாகவாவது சபை செய்யவேண்டும்.

குர்மானி பிரிட்டிஷ் மந்திரிகள் சிலரையும், ஸ்டாபோர்ட் கிரிப்ஸையும் மற்றும் சில மத்திய கிழக்குத் தலைவர்களையும் கண்டு பேசியிருக்கிறார்.

உலக அமைதி நிலவ காஷ்மீர் பிரச்னை சமரசமாக தீர்த்துவைக்கப்படவேண்டும் என்று அவர்கள் எல்லாரும் தெரிவித்ததாகவும் தான் கிரிப்ஸிடம் [illegible] என்றும், இதனல் இரு நாட்டினருக்கும் [illegible] ஏற்படுமென்று சொன்னதாகவும் குர்மானி கூறுகிறார்.

ஆட்சி முறை இருப்பதா, அகல்வதா?

—————:0:—————

தந்திரங்கள் செய்யாதீர்; ஆவன செய்ய முன்வாருங்கள்!

இந்து சட்ட தொகுப்பு மசோதா பற்றி பண்டிதர் நேரு

"இந்து சட்ட தொகுப்பு மசோதா பார்லிமென்டில் நிறைவேறும் பிரச்னையானது எனது சர்க்கார் மீது பார்லிமென்டுக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் பிரச்னையாகும்"

"எனது சர்க்கார் தொடர்ந்து இருப்பதா, அல்லது ராஜிநாமா செய்வதா என்பதை நிர்ணயிப்பதும் இங்கப் பிரச்னைதான்"

"பிரஸ்தாப மசோதாவைப் பார்லிமென்டில் நன்றாக விவாதித்து ஒரு முடிவுக்கு வருவதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டுமேயல்லாது, சில தந்திரங்கள்மூலம் மசோதாவை காலதாமதப்படுத்தக்கூடாது"

என்று இந்திய பார்லிமென்டில் பண்டித நேரு பேசியிருக்கிறார் இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய பேச்சு கொஞ்சநாளைக்கு முன் பலமாக அடிபட்டது. ஆனல் இடையிலே கொஞ்ச காலமாக அதுபற்றிய பேச்சே எழவில்லை. இதற்குக் காரணம், வைதிகர்களின் எதிர்ப்பே என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. இந்தச் சட்டத் தொகுப்பு பற்றிய விவாதம்நடைபெற்றபோது பல வைதிக உறுப்பினர்கள் ஜாதி போயிற்று மதம் போயிற்று என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வைதிகத்தின் இத்தகையஎதிர்ப்பால், அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய இம்மசோதா தாமதப் படுத்தப்படுகிறது. இந்நிலை நீடிக்குமானல் நாடு நலம் பெறாது. நாட்டு நலனுக்கு அடிப்படை சமுதாய சீர்திருத்தம். எனவே தான் பண்டிதர் நேரு இந்த சட்டத்திருத்த மசோதாவை வற்புறுத்துகிறார்.

இம்மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் அரசியல்நிர்வாகம் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப்போகும். மக்கள் நம்பிக்கையை இழந்த சர்க்கார் நீடித்து வாழமுடியாது. ஆகவேதான் "எனது சர்க்கார் தொடர்ந்து இருப்பதா அல்லது ராஜிநாமா செய்வதா என்பதைநிர்ணயிப்பதும் இந்தப் பிரச்னைதான்" என்று சுட்டிக் காட்டி பேசுகிறார் நேரு.

இந்து சட்டதொகுப்பு மசோதா ஒரு சீர்திருத்த மசோதா என்று கருதுகிறார் நேரு. சீர்திருத்தம் செம்மையான முறையிலே நடைபெறவேண்டுமானல் இந்த மசோதா கூட போதாது. இனியும் பெரும புரட்சிகரமானசட்டம் தேவை என்று கருதுகிறோம் நாம். மனுநீதியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள 'இந்துலா'வையே நாம் ஏற்றுக்கொள்ளவிரும்பவில்லை இக்கால நிலையையும் கடந்து எதிர்காலநிலை எப்படியிருக்க வேண்டும் என்பதற்கேற்ப சட்டங்கள் அமைய வேண்டுமென்று கருதுகிறவர்கள் நாங்கள்.

அந்தநோக்கத்தோடுதான் வைதிகத்தைச் சாடுகிறோம். வைதிகம் நம்மை காட்டுமிராண்டிகள் என்றுகுற்றஞ்சாட்டுகிறது. அதற்குத்தீதுசெய்ய ஏடுகள் ஆதாரம் தருகின்றன. இவ்வளவெல்லாம் தந்திரங்கள் செய்வதன் மூலம் இன்னும் சிறிது காலம் வைதிகத்தை வாழ வைத்து சமத்துவம் தலையெடுக்காமல் செய்துவிடலாம் என்று நம்புகின்றனர் சிலர்.

இதைத்தான் நேரு நன்கு உணர்ந்துகொண்டு 'பிரஸ்தாப மசோதாவை பார்லிமென்டில் நன்றாக விவாதித்து ஒரு முடிவுக்கு வர முயல வேண்டுமே யன்றி 'சில தந்திரங்கள் மூலம் மசோதாவைத் தாமதப்படுத்தக் கூடாது" என்று கண்டித்துக் கூறுகிறார்.

"சில தந்திரங்கள்"

ஆம்! அதே தந்திரங்களைத்தான் சுயமரியாதைக் காரர்களாகிய நாங்கள், இன்றல்ல, நேற்றல்ல, கடந்த இருபத்தைந்தாண்டுகளாக கல்லடி, சொல்லடிகளுக்கிடையே துணிந்து வெளிப்படுத்திக்கொண்டு வருகிறோம். எங்கள்முயற்சி பூர்த்தி, காய்த்துக் கனிகொடுக்கும் நிலைமையை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில்தான், வைதிகர்களின் 'தந்திரங்களை" உணர ஆரம்பித்திருக்கிறார் சமதர்ம வீரரென புகழ் பெற்ற பண்டிதர்நேரு! உணரட்டும்; நன்கு உணரட்டும்.

வைதீகபுரியினர் சண்டித்தனம்செய்வர்!

'இந்தச் சட்டத்தொகுப்பு மசோதா பார்லிமென்டின் சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்படுமானால்' சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப் போவதாக அனைத்திந்திய இந்தச் சட்டத் தொகுப்பு மசோதா— எதிர்ப்புக் கமிட்டி முடிவு செய்துள்ளதாம்.

கண்காட்சி சாலையில் பண்டையநாணயங்கள்

சென்னை, நவ. 26—

சென்னை சர்க்கார் பொருட்காட்சி சாலையில் பழைய இந்திய நாணயங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாணயங்களில் 26 கிழக்கு இந்திய கம்பெனியைச்சேர்ந்தவைகளாகும், விக்டோரியா ராணியின் காலத்தைச்சேர்ந்த 7 இலங்கை நாணயங்கள், 5 நாணயங்கள் போர்த்துகீசிய இந்திய நாணயங்களாகும் [illegible] 1881ஐ சேர்ந்தவை, மற்றொன்று ஒரு [illegible] நாணயம் 880ல் வெளியிடப்பட்டதாகும்.

இந்தியாவில் பிரிட்டிஷ் சைகிள் உற்பத்திசாலைகள்

லண்டன், நவ. 29—

இந்தியாவில் உயர்தரமான பிரிட்டிஷ் சைக்கிள் உற்பத்திசாலைகள் நிறுவும் திட்டத்துக்கு 2,000,000 பவுன் மூலதனம் செய்யப்படவேண்டியிருக்குமென கணக்கிடப்படுகிறது.

இவ்வாண்டில் பிரிட்டன் இந்தியாவுக்கு சுமார் 350,000 சைக்கிள்களை ஏற்றுமதி செய்துள்ளது. இவற்றின் மதிப்பு 2,600,000 பவுனாகும்.

தேர்தலதிகாரம் ஓரிடம்: நிர்வாக அதிகாரம் வேறிடம்!

என்ன சங்கடமிதுஎன்கிறார் கோபால்ரெட்டி!

பதவி 'பானம்', அதிகார 'போதை' —சேர்ந்தே 'சுகி'க்கலாமே!

காங்கிரஸ் சர்க்கார்களுக்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கிடையே நிலைபெற வேண்டிய தொடர்புகள் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பதைக் காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டு,வரையறுத்துக் கூறிவிட வேண்டுமென்று சென்னை நிதி மந்திரி தோழர் பி. கோபால் ரெட்டி நவம்பர் 27-ந் தேதி யன்று பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டார். இப்படிச் செய்தால்தான் காங்கிரசின் இவ்விரு 'இறக்கைகளும்' ஒன்றுக்கொன்று மாறுபட்டு, இரு வேறு திசைகளை நோக்கி இழுத்துக்கொண்டு நிற்கும் கேவல நிலை யேற்படாதென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

தோழர் கோபால் ரெட்டி தொடர்ந்து கூறியதாவது:— சிற்சில மாகாண காங்கிரஸ் கமிட்டி ஒரு தன்மையிலும், மாகாண காங்கிரஸ் சர்க்கார் வேறொரு தன்மையிலும் நடந்துகொண்டு வருகின்றன. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் இவ்விரு 'இறக்கைகளுக்கு'மிடையிலேயே 'யார் உயர்ந்தவர்' என்று போட்டி வந்துவிடுகிறது. இப்படி இவை இரு வேறு திசைகள் நோக்கி இழுத்துக்கொண்டு நிற்க ஆரம்பித்தால் கஷ்டமான நிலை யொன்றே வந்துசேரும். இருதரப்பிலும் காங்கிரசாரே இருப்பதால், 'யார் சொல்வதை' ஏற்பது என்பதில் பொது மக்களுக்கே குழப்பம் ஏற்பட்டுவிடும்.

"மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும், சர்க்காருக்குமிடையே இருக்கவேண்டிய உறவு முறை நன்கு வரையறுக்கப்படவில்லை. மாகாண காங்கிரஸ் கமிட்டி தேர்தல்களுக்கு அபேட்சகர்களை நிறுத்துகிறது, அதே நோக்கில் மாகாண சர்க்கார், தான் மாகாண நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்திவருகிறது. மாகாண காங்கிரஸ் கமிட்டியின் அதிகாரங்கள் எவையெவை, தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்துவதில் மாகாண சர்க்காருக்கு இருக்கவேண்டிய பொறுப்புகள் எவையெவை: இவற்றைப் பற்றித் தெளிவான வரையறைகள் அவசியம் தேவை. காங்கிரஸ்காரர்களை மட்டுமன்றி, எல்லாக் கட்சிக்காரர்களையும் திருப்தி செய்யவேண்டிய நிலையிலுள்ள சர்க்கார், சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் ஆகியோரை யெல்லாம் இழுத்துச்செல்ல வேண்டிய நிலையிலுள்ள சர்க்கார், பற்பல நடைமுறைகள், வேலைகள் இன்னபிறவற்றில் ஈடுபடவேண்டிய நிலையிலுள்ள சர்க்கார், தேர்தலகளுக்கு அபேட்சகர்கள் நியமிப்பதில் அதிகாரமின்றியிருப்பது அர்த்தமற்றதாகும். மாகாணப் பிரதமருக்கும், மாகாணக் காங்கிரஸ் தலைவருக்குமுள்ள அதிகாரங்கள் எவையெவை யென்பது வரையறுக்கப்படவேண்டும்."

காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் குமுறிப் புகைந்து கொண்டிருந்த மாபெரும் விஷயத்தைக் கக்குவதில் முந்திக் கொண்டார் மந்திரி கோபால் ரெட்டி! மாகாண காங்கிரசுக்கும், மாகாண காங்கிரஸ் மந்திரி சபைக்குமிடையே நடந்துவரும் 'பிரகடனஞ் செய்யப்படாப்' போராட்டத்தை நாட்டின் பற்பல பகுதிகளிலும் கண்கூடாய்ப் பார்த்துவரும். அதிகார போதை, பதவிவெறி, உத்தியோக வேட்டை இன்னபிற வற்றால் உந்தப் பெற்ற சுயநலக் கூட்டமே நிரம்பி நிற்கும் ஸ்தாபனமொன்றில் இதைத் தவிர வேறு எதைத்தான் எதிர்பார்க்கமுடியும்? மந்திரி கோபால் ரெட்டி செய்யநினைக்கும் 'மருத்துவம்' எந்த அளவுக்குப் பயன்படுமென்பதை இன்றே நாம் 'ஜோஸ்யம்' கூறலாம். மந்திரி சபை வேலையிலும், தேர்தலுக்கு அபேட்சகர்கள் நியமிக்கும் வேலையிலும்தலையிட மாகாண காங்கிரஸ ஸ்தாபனத்துக்கு உரிமையும் அதிகாரமும் இல்லையென்றாகி விட்டால், போட்டி-பொறாமை விண்ணமுட்டக் கொழுந்து விட்டெரிந்து, கைப்பிடிச் சண்டையளவுக்குவந்து அகிம்சாவீரர்கள் சமர்க்களத்திலேயே தினந்தினம் சந்திப்பாரென்பதை இன்றே கணித்துக் கூறிவிடலாமே! காங்கிரஸ்சபைகளில் ஆட்களையே காணமுடியாது; எல்லாம் சர்க்கார் படிக்கட்டுகளில்தான் 'மயிர்ப்பிடி'ச்சண்டையிலீடுபட்டு நிற்பர். மேற்கண்ட "சொத்தை" அதிகாரங்கள் கூட இல்லாமல், காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து பயனென்ன வென்று கூறி மந்திரி சபைக்கே போட்டியிடுவர் நம் 'தேசபக்தர்கள்'! எனவே, கோபால் ரெட்டியாரின் யோசனை சுமுகத்தை விட, கலகத்தையே பெரிதும் விளைக்கும்! போகட்டும். பாவம்! நிலைமை இப்படியே இருக்கட்டும்! ஏதோ அவர்களும் அங்கப் பதவி 'பானத்தை'ப் பருகி, அதிகார 'போதை'யில் மகிழட்டும்! அவர்கள் மற்றும் ஆகஸ்ட் சுயராஜ்யத்துக்கு தண்டவாளத்தைப் பெயர்க்க வில்லையா, தந்திக்கம்பியை அறுக்க வில்லையா? தொலைந்து போகட்டும், விடுங்கள் மந்திரிவாள்!

நிலவரிமீது மேலும் 'சர்-சார்ஜ்'!

சென்னை சர்க்கார் ஏற்பாடு

பொதுவேலைகளைப் புதிதாக மேற்கொள்ளவும், இன்னும் நன்மைதரத்தக்க திட்டங்களை அமுல் நடத்தவும் பிடிக்கக்கூடிய செலவுகளைப் பொதுமக்களிடமிருந்தே திரட்டிக்கொள்வதற்கான சட்டமொன்றை சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனராம். இச்சட்டத்தின்படி, இடபோதைய நிலவரிமீது மேலும் 'சர்—சார்ஜ்' வசூலிக்கப்படுமெனத் தெரிகிறது. அன்றியும், பல்வேறு திட்டங்களாலும் கோடியாகப் பயன் பெறும் மக்கள் பகுதியினரிடமிருந்தும் நன்கொடைகள் போன்ற தொகைகள் வசூலிக்கப்படுமென்றும் அறியப்படுகிறது. இவைபற்றி சென்னை நிதிமந்திரி, பொருளாதார வல்லுநர்களிடமும் மற்றும் ரிசர்வ் பாங்கி கவர்னர் சர். பி. ராமாராவிடமும் கலந்து ஆலோசித்தாரென்று கூறப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து இவ்வண்ணம் மேலும் பணம் வசூலிக்கும் திட்டத்தை, இந்திய சர்க்காரும் பொதுப்படையாக ஏற்றுக்கொண்டுவிட்டார்களென்றும் தெரிகிறது.

இஸ்ரேலுக்கு சோவியத் கடன் தொகை

யூதர்களின் இஸ்ரேல் நாட்டுக்கு 50 000 000, பவுன் கடன் தர ரஷ்யா சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது. இக்கடன், ரஷ்யப் பொருள்கள் மூலம் தரப்படுமாம். இஸ்ரேல் செய்தித் தாள்களில் இத்தகவல் வெளிவிப் பெற்றிருக்கிறது. சோவியத்துடன் தங்கள் உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் இஸ்ரேல் நாட்டவர் என்பதற்காகவே இக்கடன் கொடுக்கப் படுகிறதெனக் கூறப்படுகிறது.

பொது வாக்கெடுப்பு தள்ளிப் போடப்படும்

தென்னிந்தியாவிலுள்ள பிரஞ்சுப் பகுதிகளுக்கான பொதுமக்கள் வாக்கெடுப்பை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறதென்பதாகப் பிரஞ்சு சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனராம். முன்பு குறிப்பிடப்பட்டது போல் டிசம்பர் 11-ந் தேதிக்கு முன்னர் பெருவாக்கெடுப்பு நடத்துவதற்குப் பூர்வாங்க வேலைகள் செய்யப் போதிய கால வசதியில்லையென பிரஞ்சு சர்க்கார் அறிவித்துள்ளனராம். இப்படி ஒரு சிறிது காலத்துக்கு ஒத்திப் போடுவதால் தங்களுக்கொன்றும் ஆட்சேபமில்லை யென்றும் இந்திய சர்க்கார் தெரிவித்து விட்டனராம்.

அடுத்தவாண்டு பெப்ரவரியில் பெரும்பாலும் மேற்படி வாக்கெடுப்பு நடைபெபலாமென நம்பப் படுகிறது.

திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம்

திருச்சி, நவ. 28—

இன்று மாலை 4 மணிக்குத் திருச்சி, "கருணாநிதி" பார்க்கில் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு வரவேற்புக் குழுக் கூட்டம், தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. திருச்சி மாவட்ட தி.மு.க மாநாட்டிற்குத் தோழர் சி. என் அண்ணாதுரை எம். ஏ. அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

2. திருச்சி மாநாட்டிற்கு முதல் நாள் தி. மு. க. மாகாணப் பொதுக் குழுவின் கூட்டத்தைத் திருச்சியில் கூட்டுமாறு தி. மு. க. பொதுச் செயலாளரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3, மாநாட்டுப் பிரதிநிதிக் கட்டணம் ரூபாய் ஒன்றெனவும் உணவு உட்பட ரூபாய் இரண்டெனவும் இருக்கவேண்டுமென முடிவு செய்கிறது.

மாநாட்டு வரவேற்புக் குழுவினரால் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

4. மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவர் தோழர் என். சங்கரன்.

செயலாளர்கள்:- தோழர்கள் எம். எஸ். மணி, ஜி. பராங்குசம்.

விளம்பரச் செயலாளர்:— தோழர் அ. மா. வாணமாமலை.

நிதிக்குழுத்தலைவர்:—தோழர் என். சாம்பசிவம்.

நிதிக்குழு உறுப்பினர்கள்:-- தோழர்கள் எம்.கே. டி. நடராசன் (லால்குடி), வையாபுரி (கரூர்). கே. ஆர். இராசா (குளித்தலை), கந்தசாமி (முசிறி), முருகு. சுப்பிரமணியம் (புதுக்கோட்டை), கே. எஸ். காசிம் (ஜெயங்கொண்டம்), விஜயகோபாலன் (பெரம்பலூர்), ஆ. அண்ணாமலை (திருச்சி) ஆகியோர.

தொண்டர் படைத்தலைவர்:-- தோழர். ஏ. பி. தர்மலிங்கம்.

தொண்டர்படைத் துணைத் தலைவர்கள்:-தோழர்கள்சிவசங்கரன் (திருச்சி), கைலாசம் (பொன்மலை).

உணவுக்குழு உறுப்பினர்கள்:-தோழர்கள் எஸ் எம். சேட் (உறையூர்) எம். கே. டி. நடராசன் (லால்குடி) நல்லுசாமி (கரூர்), கே. ஆர். இராசா (குளித்தலை), சீனிவாசன் (சீரங்கம்) ஆகியோர்.

பந்தல் அமைப்புக்குழுவினர்களாக, தோழர்கள். வி. சீனிவாசன், (அலையாநத்தம்), நாராயணசாமி, (பெருவளநல்லூர்) மருதநாயகம் (திருவானைக்காவல்) ஆகியோர்களும் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்

எல்லாத் தீர்மானங்களுமே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அடுத்துதோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் "மாநாட்டு பணி" என்பது பற்றிக் கருத்துரை வழங்கிய பின், தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 6 மணிக்கு இனிது முடிந்தது.

(வி-உ.)

தமிழக எல்லை மாநா[டு]

டிசம்பர் இறுதியில் குமரியில் நடைபெறு[ம்]

நாகர்கோவில், நவ. 26—

குமரி முனையில் நடைபெறப் போகும் தமிழ்நாடு எல்லை மாநாட்டின் விளம்பரப்பொறுப்பாளர் தோழர் பி எஸ். மணி தெரிவிப்பதாவது:—

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆதரவில், வரும் டிசம்பர் கடைசிவாரம், குமரி முனையில் நடைபெறப் போகும் தமிழ்நாடு எல்லை மாநாட்டைச் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குவதற்கு வேண்டிய வேலைகளில் தி. த. நா. காங்கிரஸினர் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். தமிழகமெங்கும் முன்னணி பல தலைவர்களும், சென்னைத் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் பலரும் பங்கு கொள்ள வருகின்றனர். மாநாட்டிற்கென நவம்பர் 17-ம் தேதி லிருந்து நாகர் கோவிலில் ஒரு காரியாலயம் திறக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டில் வரவேற்புக்குழு அங்கத்தினராக வர விரும்புவர்களும், பிரதிநிதிகளாக வர விரும்புவர்களும் தங்கள் விலாசத்தை 'தமிழ் நாடு எல்லை மாநாடு அமிட்டிக்காரியாலயம் பார்க்வியூ, நாகர் கோவில்' என்ற விலாசத்திற்கு சீக்கிரமே தெரிவிக்க வேண்டுகிறோம். வரவேற்புக் கமிட்டி அங்கத்தினருக்கு ரூ10/-ம், பிரதிநிதிகளுக்கு ரூ2/-ம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

நமது செந்தமிழ் நாட்டின்எல்லை 'வடவேங்கடம் தென்குமரி' என்பதை முடிவு கட்டுவதற்காகவும், திருவிதாங்கூர் தமிழகம் சேரிய் பகுதிகளுக்கு நீதி எனத் தீர்மானிப்பதற்காகவும் இன்னும் நன்மையான பல செய்வதற்காகவும், தமிழ் நாடு எங்குமுள்ள மக்கள் தங்கள் பிரதிநிதிகளை மாநாட்டிற்கு அனுப்பியும், வரவேற்புக் குழுவில் அங்கத்தினராகியும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆப்கன் பத்திரிகைகளுக்கு பாக்கிஸ்தான் தடை

ஆப்கானிஸ்தானத்தில் வெளியிடப்பெறும் தினசரிகள், வார, மாத வெளியீடுகளெவையும் பாகிஸ்தானுக்குள் வருதல்கூடாதென, பாகிஸ்தான் சர்க்கார் தடையுத்தரவிட்டுள்ளனராம். இதையொட்டி ஆப்கானிஸ்தான் சர்க்காரும் பதிலுக்குப் பதில் செய்யும்வகையில, பாகிஸ்தானில் வெளியிடப்பெறும் பத்திரிகைகள், ஆப்கானிஸ்தானில் நுழையக்கூடாதென்ற தடையுத்தரவு பிறப்பித்துவிட்டனராம்.

அங்கிருந்தும் ஓட்டம்!

சியாங்கேஷேக் தான்முன்பு தங்கியிருந்த இடத்துக்கு வடமேற்கே சுமார் 200-மைலுக்கப்பாலுள்ள செங்டுவுக்கு நவ. 28-ந் தேதி காலை ஓட்டம் பிடித்துவிட்டாரென்று கூறப்படுகிறது.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் "மாலை மணி"

தி. மு. கழகம் ஜனநாயகத்தின் உறைவிடம்

இலட்சியத்தை அடையவே தி. மு. கழகம் தோன்றிற்று

திருச்சி தி. மு. கிளைக் கழகத் துவக்கவிழாவில் தோழர்கள் பேச்சு

திருச்சி, நவ. 28—

திருச்சி, 27-11-49 ஞாயிறு மாலை 9-30 மணிக்கு இரத்தின வேலு தேவர் மண்டபத்தில், இளைஞர்களும் பெரியோர்களுமாக ஏராளமான மக்கள் உற்சாகத்துடன் நிறைந்திருக்க, திருச்சி கடைவீதி தி. மு. க. கிளையின் துவக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இயக்கத்தோழர் ஒருவர், இயக்கப்பாடல்களும் திராவிட நாட்டுப்பண்ணும் பாடியபின், கழகச் செயலாளர் தோழர். ஆ. அண்ணாமலை முன்மொழிய, விளம்பர உறுப்பினர் தோழர் ரா. பா, சாரதி வழி மொழிய பொன்மலை, தோழர் கு. பராங்குசம் அவர்கள் தலைமை ஏற்றார். அவர் தமது முன்னுரையில்:—

ஜி. பராங்குசம்

திராவிட முன்னேற்றக்கழகம், அதனை இன்று நடத்திச் செல்லும் தோழர்கள் எந்த இலட்சியத்திற்காகத் திராவிடர் கழகத்தில் பணியாற்றி வந்தார்களோ, அந்த இலட்சியங்கள் அலட்சியத்திற்கு ஆளாக்கப்படாமல் நிலை நாட்டப்பட்டாக வேண்டும், என்று கருதியதன் காரணமாகவே தோற்றுவிக்கப்பட்டதென்றும், அக்-தலைமைப் பீடத்தைக் கவிழ்க்கச் செய்த சதியுமல்ல, பதவி பெறும் பேராசையின் தூண்டுதலின் விளைவுமல்ல என்றும், அன்றி, சேலத்தில், பட்டதாரிகளையும் பதவி பக்தர்களையும் கட்சியை விட்டுக் கடைகட்டச் செய்த, முற்போக்காளரான தோழர் அண்ணாத்துரையும், அன்று முதல் நேற்றுவரை, திராவிடர் கழகத்தின் வளர்ச்சிக்காகத், தம்மைத் தாமே இயக்கத்திற்காக அர்ப்பணித்துக்கொண்ட தொண்டர்களும் தான், இன்று, தி. மு. கழகத்தை நடத்த முன் வந்துள்ளனர் என்றும், எனவே-இக்கழகத்தில் — வாலிபர்கள் ஏராளமாகச் சேர்ந்து பலப்படுத்தி, இன்றைய அடக்குமுறை தர்பார் நடத்தும் கொடுங்கோலருக்குப் பதிலளிக்கும் வல்லமை பெற்றதாகச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சு. நெடுமாறன்

அடுத்துப் பேசிய தோழர் சு. நெடுமாறன் அவர்கள், அதே, கடைவீதி திராவிடர் கழகத்தின் செயலாளராக இருந்து தாம் பணியாற்றியவராகையால், இப்பொழுது— திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்படுவது மிகவும் அவசியமென்றும், காங்கிரஸ் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசுவது மட்டும் அவர்களுக்கு எந்த விதத்திலும் பயன் தராது என்றும், அவர்கள் கருதுவதைப் போல், சட்டசபையிலோ, ஆட்சி மன்றத்திலோ இடம் பெறுவது மட்டுமே எங்கள் நோக்கமாக இருந்தால், எப்பொழுதோ அதைப் பெற்றிருக்க முடியுமென்றும், அதிலும் மிக எளிதாகக் காங்கிரசில் சேர்வது-மூலமாகவே, அதைச் சாதித்துக்கொள்ள முடியும் என்றும், ஆனால், மக்களுடைய தன்மான உணர்வுக்காக, அடிப்படை உரிமைக்காகப் போரிடுவதே எங்கள் இலட்சியமாக இருந்துவருகிறது. இனியும் அந்த இலட்சியத்திற்காகவே—தி. மு கழகம் பாடுபடும் என்றும் கூறி முடித்தார்.

கா பூமிநாதன்

அதன் பின, தோழர் கா பூமிநாதன் பி. ஏ., அவர்கள் பேசுகையில், இன்றைய சர்க்கார், சர்வாதிகாரமாக, எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்க, அவர்களின் பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்பதும், புத்தகங்களைப் பறிமுதல் செய்வதும், நாடகங்களைத் தடைசெய்வதும், எதிர்க் கட்சியினர் வெளியிலேயே உலவ முடியாமற்செய்யும் அளவுக்கு, பேச்சுக்கும், எழுத்துக்கும் தடைவிதிப்பதோடு, அமைதிப் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் ஆள் தூக்கி சட்டத்தைக் கொண்டுவந்துள்ளதும், ஜனநாயகத்தையே அழிப்பதாகுமென்றும், இங்கிலையில் உள்ள சர்க்கார், ஒரு கட்சி சர்க்கார் ஆகுமேயன்றி, எப்படி பொதுமக்கள் சர்க்காராகும்? என்று கேட்டுத் தம் பேச்சை முடித்தார்.

டி. கே. சீனிவாசன்

பின்னர் தோழர் தி. கோ சீனிவாசன் அவர்கள் சொற்பொழிவாற்றினர். அவர்தமது சொற்பொழிவில ;

"நடந்த செப்டம்பர் 16-ல் துவக்கப்பட்ட தி மு கழகம், இந்தக் குறுகிய காலத்திற்குள் அதற்கு முன் தி. க. பரவாத பகுதிகளிலெல்லாம், தி கழகத்தின் நிழல் கூடப் படாத மூலை முடுக்குகளிலெல்லாம் கூட, தி. மு. க. துவங்கி பணிபுரிகிறதென்றும், திராவிடர் கழகத்தில் இருந்து விலகிய பெரும்பான்மையோர் மட்டும் அன்றி, ஏராளமான பொது மக்களும் சேர்ந்து ஆதரவு தந்துள்ளனர் என்றும், இந்நிலைமைக்காணும் சிலருக்கு ஆச்சரியமும், வேறு சிலருக்கு ஆத்திரமும் ஏற்பட்டு, ஏதேதோ பேசி, மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர் என்றும், ஆனால், திராவிட மக்களின் நன்மைக்காக பாடுபடும் நம்மை, அவர்கள் தூற்றல்-நமது இலட்சியப்பாதையிலிருந்து விலக வைக்க முடியாது என்றும் கூறினர்.

தி. க. த்திலிருந்து விலக நேரிட்டது, விலக்கமுடியாதது என்றும், தமது திருமணத்தைக்குறித்துச் சர்வாதிகாரத்தோடு நடந்து கொண்ட தலைவர், பெயரளவிற்கு செயற்குழு முதலியவைகளை அமைத்து, எல்லாப் பொறுப்புக்களையும் தம் கையிலேயே அடக்கிக் கொண்டு, எல்லாக் காரியங்களிலும் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டதைப்போல தி மு. கழகத்தில் ஒரு நாளும் நடைபெறாது என்றும், இங்கு பொறுப்புக்கள் பங்கிடப்பட்டுள்ளன என்றும், எல்லோருக்கும் கவலையும் உரிமையும் தோன்றும் முறையில் தான் இவ்வியக்கம் நடைபெறும் என்றும், அங்கே-சிலருக்குத்தான்-விளம்பரம் தரப்பட்டது. ஆனால், இங்கே தொண்டு செய்வோர் யாவர்க்கும், ஆளுக்கு ஒரு நீதியின்றி; ஒத்தமுறையில் அறிமுகப் படுத்தப்படும் நிலையைக் காணலாம் என்றும் பேசினர்.

இலட்சியத்திற்குப் பாடுபடுகிறோம்

மேலும், சில ஆண்டுகட்கு முன் ஒரு முறை, அன்று சர்—ஆக இருந்த ஆர். கே. சண்முகம், நான் ஓர் இந்து என்று கூறி கொள்ள பெருமைப் படுகிறேன் என்று, ஈரோடு மகாநாட்டில் தாம் முன்னர் கூறியதற்கு மாறாகச் சென்னையில் பேசிட, அதன் காரணமாகத் திருச்சியில் ஒரு விழாவில் அவர் பேசவந்த போது, அவரைப் பேசவிடாத அளவுக்குத் தானும் தன் நண்பர்களும் கேள்வி கேட்டதையும், இன்று—நமது தலைவர்-ஒரு திருமண ஏற்பாட்டிற்காக தம்மை, இந்து பகுத்தறிவு வாதி என்று கூறிக்கொள்வதையும், சேர்த்து எண்ணினால், அன்று எங்கள் நடத்தையை அறிந்தவர்கள் முன், தலைகவிழ்ந்து நிற்பதைத் தவிர வேறு வழியுமுண்டோ? இந்நிலைக்கு, என்னை மட்டுமல்ல, என்னைப் போன்ற, ஆயிரக்கணக்கான இளைஞர்களை, இதைப் போன்ற நூற்றுக்கணக்கான காரணங்களில், தலை யெடுக்க வொட்டாமல் செய்வதற்குப் பெரியாரின் திருமணம் இடம் தந்த பின்னும்-நாங்கள்-அவரை விட்டு கொள்கையிலே சிறிதளவும் விட்டுக்கொடுத்தறியாத நாங்கள், எப்படி விலகாதிருக்க முடியும்? எனவேதான், இலட்சியத்திற்குப் பாடுபட—திராவிடமுன்னேற்றக்கழகத்தைத் துவக்கியுளளோம் என்றும், அரசாங்கத்தார் உட்பட வளர்த்து வரும் மத மூடநம்பிக்கைகளை ஒழித்து, அறிவுப் புரட்சியைத் தோற்றுவித்து, மொழி உரிமையை நிலைநாட்டி, கலையிலே மறுமலர்ச்சியைக் கண்டு மக்கள் புது வாழ்வு பெறவே நாங்கள் பணியாற்றுகிறோம் என்றும் கூறி, காங்கிரசார் ஆள் சேர்ப்புப் படலம் நடைபெறும் முறையை விளக்கி நேருவின் அமெரிக்கப் பயணத்தால் ஏற்படவிருக்கும் நிலையை எடுத்துக் காட்டித் தமது சொற்பொழிவை முடித்தார்.

இறுதியாகத் தோழர் க. அன்பழகன் அவர்கள் சுமார் 1-30 மணி நேரம் இன்றைய நிலைமைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

சிரங்கம், திருவானைக்காவல் தி. மு. கழகத்தினர் தோழர் அன்பழகனுக்கு மாலை சூட்டினர்.

தோழர் க. அன்பழகன் அவர்களது பேச்சு நாளை வெளிவரும்.

அதன் பின்— தலைவர் தம் முடிவுரையில்— சொற்பொழிவாளர்களின் கருத்துக்களைச் சிந்தித்து, கழகத்தை ஆதரித்து வலுப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட பின் — செயலாளர் அண்ணாமலை அனைவர்க்கும் நன்றி கூறக் கூட்டம் பகல் 1-மணிக்கு முடிவுற்றது. முதல் நாள் இரவிலிருந்தே மழையும் — தூற்றலுமாக இருந்தும், ஏராளமான மக்கள் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(வி. உ.)

ஐ. நா. முடிவைப் பொறுத்ததே எங்கள் முடிவும்

புதுவாழ்வு பெற்ற சீனாவை இந்திய சர்க்கார் வரவேற்கும் லட்சணம்

—(0)—

சமதர்ம வீரர் நேருவின் கருத்து

"நமது பிரதிநிதிகளின் ஆலோசனையின் மீது புதியசீனாவை நாம் அங்கீகரிக்கலாம், இது விஷயத்தில் முடிவு செய்ய வேண்டியவர்கள் நாம்தான் மற்ற நாடுகளையும் இவ்விஷயம் பற்றி கலந்தாலோசித்த பின்னரே இதை நாம்செய்ய வேண்டும் புதிய சீனாவை அங்கிகரிப்பதா, இல்லையா, என்பது பற்றி முடிவு செய்யும் பொறுப்பு எப்படி நம்முடைய சொந்தப் பொறுப்போ, அது போலவே, அம்முடிவை எப்பொழுது செய்வது என்ற பொறுப்பும் நம்மையே சார்ந்ததாகும்"

என்று பண்டித நேரு பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசிய போது புதிய சீனாபற்றிய தனது கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இது தான் இந்திய சர்க்கார் புத்துலகை வரவேற்கும் முறை போலும்! புதிய சீனாவை அங்கீகரிப்பது இவர்களுடைய கையில்தான் இருக்கிறதாம். ஆனாலும் அவர் முடிவு என்ன என்பதை எதிர்பார்த்து இருக்கிறார்களாம் அதாவது ஐ நா. சபையில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்காபிரிட்டன் அவற்றின் அடிவருடிகள் என்ன முடிவு செய்கிறார்களோ அம்முடிவே இந்தியாவுக்கு காணவேண்டும் என்பது, இந்திய அரசியலாரின் கருத்து இக்கருத்துக்கு அவர்கள் காட்டும் காரணம், இந்தியா ஐ நா. வின் ஆதிக்கக்காரர்களின் கருத்துக்கேற்ப நடப்பதே முறை என்பதாகும்.

ஆனால் இக்கருத்தை வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்பட்டு 'எல்லாம் எங்கள் விருப்பப்படியே செய்வோம்' என்ற கோணத்தில் பேசுகின்றனர். எப்பொழுது முடிவு காண்பது என்பது அவர்களுடைய சொந்த பொறுப்பாம்.

புதிய சீனாவைப் பற்றி இந்திய அரசியலார் என்ன கருத்துக்கொண்டிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. புதிய சீனா புத்துலகின் ஒருபகுதி. அதை இந்திய அரசியலார் அங்கீகரிக்கவில்லை என்றால், அவர்கள் புத்துலகை அங்கீகரிக்கவில்லை என்பது அர்த்தம். அப்படியில்லையானால் புத்துலகக் கருத்து இந்தப் புண்ணியவான்களிடம் இல்லை யென்பது பொருள். அவ்வளவுதானே யன்றி, இந்தியா அங்கீகரிப்பதால் புதிய சீனாவுக்கு வரப் போகும் லாபமோ, அங்கீகரிக்காவிட்டால் வரப்போகும் நஷ்டமோ ஒன்றுமில்லை.

ரஷியாவும் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் ஒரு நாடுதான். அந்த நாடு புதிய சீனாவை அங்கீகரித்துவிட்டது. இதனால் ஐ நா. சங்கத்தின் கருத்துமாறாக ரஷியா நடந்துகொண்டது என்று யாரும் சொல்லிவிட முடியாது தனக்குச் சரியெனப்பட்டதைத் துணிவுடன் செய்ததன் மூலம் தனதுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொண்டது ரஷியா.

இதனைத் தன்னைப்போன்ற ஐ நா. சபையின் உறுப்புகளில் ஒன்றான ரஷியா நடந்து கொண்டதைப் பார்த்தேனும், அச்சம் காரணமோ கொள்ளாமல், புதிய சீனாவை இந்தியாவும் அங்கீகரித்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. ஐ.நா. வின் முடிவை எதிர்நோக்கியிருக்கிறது. இதிலிருந்து இந்தியா தன்னுரிமை பெற்று தனக்குச் சரியெனப் பட்டதைச் செய்யும் துணிவைப் பெறவில்லை யென்பது புலனாகிறது.

ஆசிய நாடுகளின் மறுமலர்ச்சி பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறார்கள் இந்நாட்டு ஆட்சியாளர்கள். ஆனால், அடுத்துள்ள சகோதர நாடு ஒன்று, அதிலும் ஆசியாவிலேயே மிகப் பெரிய நாடு புத்தாட்சி பெற்றதைக் கண்டு அதற்கு அங்கீகாரம் அளிக்க இவ்வளவு யோசனை செய்கிறார்கள். ஐ. நா. சபையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்னே விந்தை! சமதர்மம் பேசி சண்டப்பிரசண்டம் செய்யும் பண்டித நேருவைத் தலைவராகக் கொண்டிருக்கும் இந்திய அரசியலாரிடம் இத்தனை பிற்போக்குத்தன்மை இருக்கின்றது என்பது வெட்கமும் துக்கமும் படவேண்டிய விஷயமன்றோ.

ருமேனிய 'பீனல்கோடு' கம்யூனிஸ்டு மயமாகிறது!

ருமேனிய சர்க்கார் பீனல் கோடிலுள்ள 2000 சட்டங்களை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ரஷ்ய கோடிலுள்ள சில சட்டங்களைச் சேர்த்துக் கொள்ளும் எனத் தெரிகிறது.

—ருளோ-ந்

வரிப்பணம் வாணவேடிக்கையாகிறது!

சுதந்திர ஆட்சியில் ஆளுக்கொரு நீதியா?

திண்டுக்கல்லில் தோழர்கள் என். வி. நடராசன், எஸ். முத்து ஆகியோர் முழக்கம்

திண்டுக்கல், நவ 28—
இந்நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 27—11—49 ஞாயிறன்று ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் மாரியம்மன் திடலில் நடைபெற்றது. தோழர் காளியப்பன் முன்மொழிய, தோழர் வெ. ராசு வழிமொழிய, தோழர் எம். பரமசிவம் தலைமை தாங்கினர். தலைவர் தமது முகவுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றத்தையும், அவசியத்தைப் பற்றியும் விளக்கிப் பேசினர்.

அடுத்துப்பேசிய நகரச் செயலாளர் என். முத்து அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கமாவது:—

"தோழர்களே! இன்றைய நமது நாட்டு நிலையினை நோக்கும்போது, ஆளவந்தாரின் அடக்குமுறைச் சட்டமே அங்கங்கே தலைவிரித்தாடுகின்றது. ஏன் என்று சிறைவாசம், 'ஆகஸ்டு' என்றால் தடியடிப் பிரயோகம், ஏட்டிலே தீட்டினால் தடை. இந்த அவல நிலையில்தான் இன்றைய ஆட்சி நடைபெறுகின்றது. அடக்கு முறையைக் கொண்டு அவனி கண்டு விடலாம் என்று கருதிய, எந்த எதேச்சாதிகார ஆட்சியும், நெடு நாட்கள் ஆட்சிப் பீடத்திலே இருந்ததாக வரலாறு கிடையாது. இன்று திராவிடத்திலே ஆளவந்தாரின் அவல ஆட்சியை, எதற்கும் அச்சப்படாமல் எடுத்துக் கூறி வருபவர்களாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் இருக்கின்றார்கள். இந்த நிலைமையிலே முற்போக்கு எங்கள் முகாமிலே வந்து கூடுமாறு அழைக்கின்றேன். எங்கள் முகாமில் வந்து சேரும் கம்யூனிஸ்டுகளுக்கு, மாஸ்கோ கூலிகள், நாசவேலை செய்யும் அழிவு வேலைக்காரர்கள் என்ற அவப்பெயர் ஒழியும். சோஷலிஸ்டு தோழர்களே, பாசத்திற்கும் பாசிசத்திற்கும் இடையே நடமாடும் ஜெயப்பிரகாசரின பாதையிலே சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் போக்கிக்கொண்டு, நாட்டு மக்களுக்கு உண்மையான தொண்டாற்ற எங்கள் முகாமிலே வந்து சேரும்படி அந்த மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு அன்பழைப்பு விடுக்கிறேன், உவகையோடு!" என்று முடித்தார்.

அடுத்துப் பேசிய தோழர் துரைராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"தோழர்களே! இன்று நாங்கள் நாட்டு மக்களுக்கு ஆளுவோரும் கூட கண்டு ஆச்சரியப்படும், அச்சப்படும், ஆத்திரப்படும், அளவிற்கு அருந்தொண்டு செய்து வருகின்றோம். சட்டசபையினை எட்டிப்பார்க்கும் திட்டமில்லாமல், பண மூட்டைகளின் ராக்குப் பக்க பலமும் இல்லாமல், வைதிகர்களின் 'பூரண கும்பம்' இல்லாமல் வானொலி ஒலிபரப்பிகளின் பிரச்சாரமில்லாமல், வசதியற்ற நிலைமையிலே, ஏழ்மையிலே சிக்கிச் சிதையும் இந்த நாட்டு பாட்டாளி மக்களுக்கு உள்ளபடியே உள்ளத்திலே அரசியல் இலாபம் பெறும் கள்ளச் சிந்தனையும் காழ்ப்பு நினைப்பும் இல்லாமல் பணியாற்றி வரும் கட்சி—அறிவுப் புரட்சி புரிந்து வரும் கட்சி எங்கள் முன்னேற்ற முகாம் ஆகும். இன்று இங்கு நமது நாட்டை வேட்டைக் காடாகப் பயன்படுத்தி வரும் வடநாட்டு சேட்டுக்களையும்; பாட்டாக்களையும் ஓட்ட வேண்டுமென்று நாங்கள் நாட்டு மக்களான உங்களிடம் புள்ளி விவரங்களோடு எடுத்துக் கூறுகிறோம். இன்பத் திராவிடத்தை, என்றென்றும் பட்டியாக விவசாய நாடாக, மார்க்கெட்டாக வைத்துச் சுரண்டும் சித்திர வதைத் திட்டம் உருவாகி விட்டதாகச் செய்தித் தாள்களிலே காண்கிறோம். அரசியல் நகல் திட்டம் சட்டமாக்கப்பட்டுவிட்டது அரசியல் ஆக்க மன்றத்திலே என்று! இந்தக் கட்டுத் தட்டுக் கூட்டுறவிலிருந்து அறுத்துக்கொள்ள, அன்னியரின் வேட்டைக் காடாக என்றென்றும் இல்லாது, இல்லாமையை இங்கிருந்து களைய, நமது மக்களுக்கு வாழ்விலே வீசும் வேதனைப் புயல் ஓய்ந்து, இன்பத் தென்றல் வீச, "கெட்ட போரிடும் உலகை சாய்த்து பொது உடைமைப் புதியதோர் உலகு செய்ய", சாதிபேதமற்ற சமத்துவ, சகோதரத்துவ கட்சி நிறுவ திராவிடம் பிரியவேண்டுமாதலால் பிரிவினைக்கு நீங்கள் எல்லோரும் உழைக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்." என்று சுருக்கமாக தனது சொற்பொழிவினை முடித்தார்.

அடுத்துப் பேசிய சென்னை 'திராவிடன்' ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

இந் நகரிலே இருஆண்டுக்கு முன்னர் பெரியாரின் அன்றைய பெரும் படையின் தொண்டன் என்ற முறையிலே வந்த நான், இன்று அவரது தலைமையினின்று விலகி, ஆனால் அவரது கொள்கைகளையே வலியுறுத்திக்கொண்டு முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளனாக பணியாற்றி வருகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கொள்கை—இலட்சியந்தான் பெரிதே யன்றி செல்வாக்கு—புகழ்—தலைமை—பதவி—பட்டம் ஆகியவைகளல்ல. அதற்கேற்பவே திமு. கழகம் பணியாற்ற முற்பட்டுள்ளது. இன்றைய அரசியலைப் பற்றி ஆராய்வோம், சொல்லும் செயலும் நமது காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு ஒருமைப்பாடாக இன்றும் மட்டுமல்ல, என்றுமே இருக்காது என்று எண்ணும் போக்கிலே தான் நமது இன்றைய ஆட்சி நடைபெறுகிறது. வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டு வந்த நேரத்தில் அவன் கையாண்ட விருந்து, வேடிக்கைகளைக் கண்டு வெகுண்டெழுந்து மேடையிலே ஏழை நாட்டு வரிப் பணத்தை வாண வேடிக்கைக்குப் பயன்படுத்துவதா என்று முழங்கிய முன்னாள் விடுதலை வீரர்கள்தான் இந்நாள் ஆட்சிப்பீடம் அமர்ந்து ஆடம்பரத்தின் உச்சியிலே ஏறிக்கொண்டு கோலோச்சுகிறார்கள். அண்மையிலே சென்னை அரசியலார் விருந்து, வேடிக்கைகளுக்கு செலவிட்ட பட்டியல் ஒன்றை சட்டசபையிலே கூறினார் குபேர நாடும் ஆச்சரியப்படும்படி, வரிப்பணத்தைவான வேடிக்கையாக்காதே என்று அன்று ஆங்கில ஆட்சியிலே எக்காளமிட்டவர்கள், இன்று ஏன் ஆயிரக்கணக்கிலே படேல், பண்டிதர், ஆச்சாரியார் இவர்களில் சென்னை பயணத்திற்குசெலவு செய்துள்ளார்கள். இப்படி இவர்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு சம்பளம் 150 தினசரி சாப்பாட்டுக்கு மட்டும் 12-8-0, மந்திரிகளுக்கு மாத சாம்பளம் என்று மெருகு குலையாத மோட்டார் சவாரியோடு பணமூட்டை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் போது, காலை சென்று, மனைவி மக்களை வறுமைக்கூடான தனது வீட்டிலே விட்டுவிட்டு இரவு வரை உழைத்து வரும் தொழிலாளி ஓரளவு கூலி உயர்வு கேட்டால், சுட்டுத் தள்ளுகிறார்களே இந்த நிலைமை நியாயமா, சரியா, முறையா என்று நாங்கள் உங்களின் சார்பாக கேட்கிறோம் ஊராள்வோரை இது மட்டுமல்ல; சொந்த நாட்டு மக்கள் திராவிடத்திருநாட்டின் குடிமக்கள் சிலோன், மலேயா, மோரிஸ், தென்னாப்பிரிக்கா விலேதேயிலை இரப்பர் தோட்டங்களிலே பச்சை இரத்தம் பரிமாறிக்கொண்டு உரிமை பறிக்கப்பட்டுதேம்பித்திகைக்கின்ற இந்த நேரத்திலே, வடநாட்டு அகதிகளுக்கு வசதியான வாழ்வு ஆவடியிலே அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது நமதுசென்னை அரசியலாரால்-நமது நாட்டு பெருந்தொழிலான கைத்தறி நெசவாலைத்தொழில் நசித்து அந்த கைத்தறித்தொழிலாளர்கள் பட்டினிப்பட்டாளமாக நாட்டிலே உலவி வருகின்ற இந்த உள்ள முருக்கும் காட்சியைக்கண்டு அதனைப்போக்க ஏன் உடனடியாக திட்டம் தீட்டவில்லை நமது கட்சியாளர்கள். வடநாட்டு அரசியல் குத்திரம் இழுக்கப்பட்டால் நேருவால் நமது ஆட்சிபீடம் சென்னை மாகாண அரசியல் ஆடுகின்ற அவல நிலைபோக வேண்டாமா? இந்த உரிமையற்ற உவமைபற்ற நிலைமைகளைப் போக்கிக் கொள்ளத்தானே நாங்கள் நாட்டுப்பிரிவினையை வலியுறுத்துகின்றோம்." என்று தொடர்ந்து நடராசன் அவர்கள் பேசும்போது, பெருமழை வந்து விடவே மக்கள் கலைய வேண்டிய கஷ்ட நிலைமையிலும்கூட குடையின் உதவியால் இருந்துகொண்டு, நடராசன் அவர்களைத் தொடர்ந்து பேசும்படி கேட்டார்கள்-இதற்கிடையில், மழையின் வேகம் அதிகரிக்கவே மறுமுறை வாய்ப்பு கிடைக்கும்போது விரிவாகப் பேசுவதாகக்கூறி, தமது பேச்சினை நன்றியோடு முடித்துக் கொள்ளவே, தலைவர் நன்றியுரையில் முடிவுரையாகக்கூறக் கூட்டம் இனிது முடிந்தது. மழையாக 'வ' காலையிலிருந்து மாலைவரை இருந்துங்கூட, பொது மக்கள் ஆயிரக்கணக்கிலே கூட்டத்திற்குவந்து ஆர்வமுடன் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

சி. ஆரின் மேடைப்பேச்சு!

மேடைகளில் பேசவும், எழுத்தில் எழுதவும் மட்டும் ஜாதி ஒழிப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அத்தியாவசிய தேவைகளுக்கு அவைகளை அப்படியே பாதுகாத்து வருவது என்ற நினைப்பை விட்டு விடுங்கள். இது நடக்க முடியாத விஷயம்
—சி. ராஜகோபாலாச்சாரியார்

டில்லி, நவ. 28—

மீனாட்சியம்மை வீட்டில் கொள்ளை!

திருத்தங்கல், நவ. 27—
நேற்று இரவில் இவ்வூர் சிவன் கோவிலில் குடி இருக்கும் சொக்கநாதர், மீனாட்சியம்மன் ஆகிய தம்பதிகள் நித்திரையிலிருக்கும் பொழுது சில திருடர்கள் அறைக் கதவு பூட்டுகளை உடைத்து அம்மனின் தாலி மூக்குத்தி, பட்டாடை கொலுசு முதலிய நகைகள் ரூபாய் 1000 (ஆயிரம் மதிப்புள்ளது) இவைகளை எடுத்துச் சென்றுவிட்டார்கள். காலையில் அர்ச்சகர் அறையைத் திறந்து பார்த்த பொழுது சொக்கநாதர் கால்கள் ஒடிந்தும், அம்மன் கைகள் ஒடிந்து வெளியே எறியப்பட்டுமிருந்தன. போலீசார் புலன் அறிந்து வருகின்றனர். (ச-சி)

இலங்கை சர்க்காருக்கு ஆதித்திராவிடர் எச்சரிக்கை

"கோயிலுக்குள் அனுமதியாவிடில் புத்த மதத்தில் புகுந்துவிடுவோம்"

தங்களைக்கோயில்களுக்குள் நுழைய அனுமதிக்காவிட்டால், இந்து மதத்திலிருந்து புத்த மதத்திற்கோ, அல்லது வேறு மதத்திற்கோ தாங்கள் மாறிவிடப் போவதாக இலங்கை ஆதித்திராவிடர் அறிவித்திருக்கின்றனர்.

இது விஷயமாக பரிசீலனை செய்யும் கமிட்டி இப்பொழுது கூடி வருகிறது. கோயில் நுழைவை ஆதரித்தும் எதிர்த்தும் ஆர்பாட்டங்கள், கமிட்டி கூடும் இடம் முன்பு நடைபெற்று வருகின்றன.

—குளோப்

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி ஏற்பட முதலியவைகளை நாசமாக்கி அபார்க்க நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G ...வியப்ப ஏஜன்ஸியார், மதுரை.

S. S. L. C. 1950-க்கு,
சிறந்த வழிகாட்டி
மூர்த்தியின்
தமிழ் வினா விடை
விலை ரூ 1—4—0
சாந்தி நிலையம்,
தஞ்சை.

மிளகுக்கு இந்தியாவின் ஏற்றுமதி வரி

பிரிட்டன் இறக்குமதியை குறைக்கும்

மிளகு ஏற்றுமதிக்குப் புதுவரி ஒன்றை ஏற்படுத்த இந்தியா தீர்மானித்திருப்பதால், பிரிட்டனில் மிளகு இறக்குமதி வெகுவாகக் குறையும் என்றும், மிளகுக்குப் பதிலாக உபயோகிக்க பதில் பொருள் தேடப் படலாமென்றும் இங்குள்ள மார்க்கெட் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பிரிட்டன், போருக்கு முன்பு உபயோகித்த அளவில் பாதியைத் தான் இப்பொழுது உபயோகித்து வருகிறது.

இன்னும் 5 ஆண்டுகளுக்குக் கிழக்கு இந்திய மிளகு வெளி நாடுகளுக்கு வரும் நிலைமையில் இல்லை, யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜெர்மனி ஆகிய மிளகு அதிகம் வாங்கும் நாடுகளிலும் இப்பொழுது ஸ்டாக் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. —குளோப்

நிறவெறிக் கொள்கைக்குக் கண்டனம்

லண்டன், நவ. 29.
லண்டன் 'மான்செஸ்டர் கார்டியன்' நேற்றைய தினம் டாக்டர் மலானின் நிறவெறிக் கொள்கையைக் கடுமையாகத் தாக்கியுள்ளது.

'டாக்டர் மலானின் கொள்கை அரசியல் அறிவீனமையின் ஆழத்தை காட்டுகிறது, அதுவே, அரசியல் சிறநோ ஏற்றுக் கொண்டு கூடாத அக் கொள்கை கண் மூடித்தனமான துவேஷத்தையும் பகைமையும் வளர்க்கிறது' என்று அப்பத்திரிகை மேலும் கூறுகிறது. —குளோப்

"தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலை"

தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலையை விவாதிக்கும் பொருட்டு இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா பிரதிநிதிகள் கூட்டவுள்ளில் கூடுவதற்கு உகந்த தினம் அடுத்த பெப்ரவரி 6-ம் தேதியாகுமென்று தென்னாப்பிரிக்கா சர்க்கார் அறிவித்துள்ளதாம் ஐ. நா. வின் தீர்மானத்தையொட்டி நடைபெறப்போகும் மாநாடு இது வென்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

2—12—49

கணியூர் :— இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்

3—12—49

புளியமங்கலம் (அரக்கோணம்):-என். வி. நடராசன், சத்திய வாணிமுத்து, என். சஞ்சீவி.

இனி நடப்பவை

சோழவந்தான்:—மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 4-12-49 ஞாயிறு காலை 10-மணிக்கு சோழவந்தான் ஆவுடையப்பன் அவர்கள் இல்லத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் மாவட்டக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். மாவட்டத்தில் உள்ள கிளைக்கழகத்தோழர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன் என அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

* * *

மதுரை:—4-12-49 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு கருவூர்ணா ஐயர் தெப்பக்குள மைதானத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். இரா. நெடுஞ்செழியன், எஸ். உத்தண்டன், எஸ். அய்யாசாமி முதலியோர் பேசுவார்கள்.

* * *

உதகை—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 2—12—49 மாலை 6-மணிக்கு உதகை வழக்கறிஞர் தோழர் கிருட்டினசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

கணியூர்—இவ்வூர் தோழர் சு. ராமசாமி அவர்கள் மகள் தோழியர் கற்பகத்தாற்கும், இவ்வூர் தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் கே. என். அருமுகத்துவுக்கும் 2-12-49 வெள்ளி காலை 9-மணிக்கு தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

"புதுவாழ்வு"

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையினின்றும் வந்துகொண்டிருந்த 'புதுவாழ்வு'—வார இதழ் ஈரோட்டுக்கு மாற்றப்படுவதால், அதுவரை ஓரிரண்டு மாதங்கள் வெளியீடு தாமதமாகுமெனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நீச்சல் மூலம் சிகிச்சை

லண்டன், நவ. 26—

இளம் பிள்ளை வாதநோய் ஏற்பட்ட சிறுவர் சிறுமியர்க்கு நீந்தும் பாடங்களைச் சொல்லிக்கொடுத்து அதன் மூலம் வியாதியை ஒழிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

முதலில் மிதக்கவும், பின்னர் நீந்தவும் கற்றுக்கொடுக்க சில கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன.

—ரூலேப்

தமிழ் மறுமலர்ச்சி மாநாடு

இலக்கிய ஓவியங்களுக்குப் பரிசு!

மதுரை, நவ 25 —

24-11-49-ல் தமிழ் மறுமலர்ச்சி மாநாட்டு வரவேற்புக் கழகக் கூட்டம் தலைவர் சொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் கூடிற்று. செயலாளர் மீ. சு. இளமுருகனார் கொண்டுவந்த தீர்மானங்கள்: மாநாட்டில் தமிழ்க்கொடியேற்ற சேலம் தமிழாசிரியர் கோ. சி. பெரியசாமிப் புலவரை அழைப்பதென்றும், கட்சி பேதமற்ற முறையில் தமிழ் இலக்கியங்களுக்கு ஏற்ற முறையில் ஓவியங்கள் வரைந்தனுப்புமபடி ஓவியர்களைக் கேட்டுக்கொள்வதுடன், அந்தச் சித்திரங்களை மாநாட்டிலே காட்சிசாலையில் வைப்பதுடன் சிறந்தவைகளுக்குப் பரிசு கொடுப்பதென்றும்; மாநாட்டு வரவேற்பாளர் கட்டணம் 5-0 0, சார்பினர் கட்டணம் 2-0-0 என்றும் முடிவு செய்யப்பட்டன. ஓவியங்களை "மீ. சு. இளமுருகனார், செயலாளர், தமிழ் மறுமலர்ச்சி மாநாடு, பெரியகுளம்" என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி குழுவினர் கேட்டுக்கொள்ளுகிறார்கள். (செ-ர்)

கோவை மாவட்டத்திலுள்ள தி. மு. க. கிளைகளுக்கு அறிவிப்பு

கோவை, நவ. 26—

"உறுப்பினர்கள் சேர்க்கும் புத்தகங்கள் மாவட்டத்திலுள்ள எல்லா கிளைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு கழகமும் குறிப்பிட்ட எண் முதல் எண்வரையுள்ள புத்தகங்களைப் பெற்றுக்கொண்டதற்குவிபரம்தெரியப்படுத்துவதுடன் மேல்கொண்டு தேவைக்கும் எழுதவும்.

ஏற்கனவே புத்தகங்கள் பெற்றுக்கொண்ட கழகங்களும் துரிதமாக உறுப்பினர்களைச்சேர்த்து புத்தகங்களையும சந்தா தொகையின் பகுதியையும் மாவட்டக் கழகத்திற்கு அனுப்பவும்.

மாவட்டத்திலுள்ள தி. மு. க. கிளைகளும அதைச்சார்ந்தவைகளும தனதன் செயற்குழுவினர் விபரத்தையும், மாவட்டக் கழகத்துடன் இணைத்துக்கொண்டு வேலை செய்வதற்கான கடிதத்தையும் தவறாமல் அனுப்பிவைக்கவும்" என்று தோழர் எஸ். ஏ. ராசமாணிக்கம் உதவிச் செயலாளர் கோ. மா. தி. மு. கழகம் அறிவிக்கிறார்.

அஸ்ஸாம் . . .

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

மற்றப் பொருளாதார சமுதாயத் துறைகளில் தலையிடக்கூடாது. அந்தந்தப் பகுதிகள் தத்தம் விருப்பப்படியே இயங்க அனுமதிப்பதே அறிவுடைமை

இதனை ஏன் வலியுறுத்திக் கூறுகிறோமெனில், இத்தென்னாட்டைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தினால் நாம் எத்துறையில் முன்னேற்றமும் கண்டோமில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரிடம் மடிப்பிச்சைகேட்கவேண்டிய நிலையில் உள்ளது தென்னை மாகாணம். அப்படி கேட்டும் கோரிய பலன் கிட்டவில்லை. ஆதிக்கம் செலுத்தவும், இம்மாகாணப் பொருளாதாரத்தைச் சுரண்டவும்தான் மத்திய ஆட்சி இருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறதே யன்றி இம் மாகாணம் பொருளாதாரத் துறையில் முன்னேறவோ, சமுதாயத் துறையில் சீர்பெறவோ மத்திய ஆட்சியாளர் செய்ததுஎன்ன? மத்திய சர்க்காருடன் சேர்ந்திருந்தால்தான் வாழ்வுண்டு என்று அஸாம் மலை ஜாதியினரைப் பார்த்துக் கேட்கும் ஆச்சாரியாரைக் கேட்கிறோம் இந்திய சர்க்காருடன் இணைபிரியாது வாழும் சென்னை மாகாணத்துக்கு ஏன் இந்த நிலை? அசாம் மக்களுக்கு ஆச்சாரியார் சொல்லுவது போல் இம் மாகாணசதிமொழி, நாகரிகம் முதலியன பாதுகாக்கப்பட்டனவா? பாதுகாக்கப்படாவிடினும் அவற்றுக்குப் பங்கம் விளைவிக்காமலாவது இருக்கின்றனரா? இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்படுவது எதைக் காட்டுகிறது? நடுத்தரப்பள்ளிகளின் நிருவாகத்தை அரசியலாரே மேற்கொண்டு நடத்துவது என்றிருந்த ஏற்பாடு சிதைந்து போகக் காரணமென்ன? மத்திய ஆட்சியாளர் பணமில்லை என்று கையை விரித்ததாலன்றோ இந்நிலை?

இங்ஙனம் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு, பாதுகாப்பு என்ற விஷயத்தில் மாத்திரம் மத்திய சர்க்காருக்கு அடிபணிய வேண்டுமென்றால் இது எந்த நீதியில் அடங்கும் என்று கேட்கிறோம். பாதுகாப்புக்குப் பலம் வேண்டும்; பலத்துக்குச் சுதந்தரம் வேண்டும். சுதந்திரத்தை இழந்து பாதுகாப்புத் தேடுவது கண்ணை இழந்து காட்சி இன்பம்காண விழைவதுபோலாகும்.

ஒரு நாட்டின் பலம் அந்த நாட்டின் பரப்பளவைப் பொருத்ததன்று. ஜெர்மனி அளவில் சிறியதாக இருந்த போதிலும் அகில உலகையே ஆட்டிவைத்ததை நாம் காணவில்லையா! இதற்குக் காரணம் என்ன? ஜெர்மனி அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய எல்லாத்துறைகளிலும் சுதந்திரநாடாகவிளங்கியதனாலன்றோ? எனவே, ஆச்சாரியாரின் பயமுறுத்தல் அர்த்தமற்றது என்பதை விளக்கவும் வேண்டுமோ.

வெளிவருகிறது !

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர் : C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு :—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

மங்கநல்லூர்

மங்கநல்லூர், நவ. 25—

24-11-49 இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மங்கநல்லூர் தோழர் ஏ. எம். உசேன் அவர்கள் தலைமை வகித்தார். தி. மு. கழகக் கொடியை குத்தாலம் தோழர் வி. மாணிக்கம் அவர்கள் ஏற்றிவைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார். காஞ்சி கல்யாணசுந்தரனார் அவர்கள் 'தற்கால அரசியல் நிலை" என்பதைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார் மற்றும் தோழர் தோழர் பி. எஸ். இளங்கோ; சாமிநாதனும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தோழர் முத்துக்குமாரசாமி முடிவுரை கூற இனிது முடிந்தது. (வி-உ)

அனந்தப்பூர்

அனந்தப்பூர், நவ. 28—

அனந்தப்பூர் தி.மு. க. நகரக் கிளையின் சார்பாக இருமுறை தடைபட்டுப் போன பொதுக்கூட்டம் 26-11-49 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, புது வசகர மண்டபத்திற்குப் பக்கத்திலுள்ள மைதானத்தில் தோழர்களின் பெருமிதமான ஆதரவுடனும், உற்சாகத்தோடும், வெற்றிகரமாக நடைபெற்றது. தோழர். ஆர். பி. டென்னிஸ் அவர்கள் கூட்டத்திற்குத்தலைமை வகித்து, முன்னுரையாக கென்னடு மக்களின் ஐக்கியத்தைக் குறித்துச் சிறிது நேரம் பேசிய பின்னர் பிறகு ஈரோடு. ஜெயராஜ், நாஞ்சில் நாடு பி. டேவி செயலாளர் எம். என். ரமின் ஆகியோர் தென்னாடு தனியாகப் பிரியவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியும், பார்ப்பனீயத்தின் பிரித்தாளும் கொள்கை வடநாட்டுச் சுரண்டல் முறை ஆகியவற்றை விளக்கியும் உணர்ச்சியோடு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

பி. வி. முத்துசாமி,

அடுத்து, வட சென்னை பி. வி. முத்துசாமி அவர்கள், ஆந்திர நாட்டிலும் தி. மு. க வின குரல் கேட்கப்படுவது கழகத்தின் அடிப்படை இலட்சியத்தின் வெற்றிக்கு நல்லதோர் அறிகுறி என்பதைச் சுட்டிக்காட்டி, இது போல கன்னட, கேரளம், பகுதிகளிலும் நம் கொள்கைகள் பரவ மத்தியக் கழகம் ஆவன செய்து வருவதாகவும் கூறி, தொடர்ந்து—திராவிடர் இன உணர்ச்சி, திராவிட நாட்டுப்பிரிவினை தி.மு.க. வின் செயல்முறை திட்டங்கள் ஆகியவற்றை விளக்கி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். கடைசியாக, கிளம்பர உறுப்பினர் தோழர், என். வி. குமாரசாமி அவர்களால் இரண்டு தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக ஆதரிக்கப்பட்டதுடன், தலைவர் முடிவுரை கூற நன்றியிலுடன் கூட்டம் சிறப்பாக முடிந்தது.

தீர்மானங்கள்:—

1. வட ஆற்காடு வேலூர் பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்கள் பேசும்போது, குழப்பமும், கலகமும் நடந்தது என்ற செய்தி கண்டு இக்கூட்டம் மிகவும் வருந்துவதோடு, அந்நிகழ்ச்சி பற்றி தி.மு.க. பொதுச்செயலாளர் வெளியிட்டிருக்கும் அதிகாரப்பூர்வமான அறிக்கையை இக்கூட்டம் முழு மனதுடன் ஆதரிக்கிறது.

2. தி. மு. கவின் அதிகாரப்பூர்வமான ஆங்கிலவார வெளியீடு வெளிவர ஏற்பாடு நடப்பது வரவேற்கத்தக்கது என்று எடுத்துக் காட்டுவதோடு, அதுபோலவே, ஆந்திர, கன்னட, கேரளப்பகுதிகளிலும் கழகக் கொள்கைகள் பரவ பத்திரிகை-பிரசாரம் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென இக்கூட்டம் மத்தியக் கழகத்தைக்கேட்டுக் கொள்கிறது (வி-உ)

என். எஸ். இளங்கோ

அதிராம்பட்டின தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் சென்ற பத்துநாட்களாக டைபாயிட் ஜுரத்தினால் படுக்கையிலேயே இருப்பதால், பொதுக்கூட்ட அழைப்புகளை அவரால் ஏற்றுக்கொள்ள இயலாமற்போய்விட்டது. குணம் அடைந்த அவர்கள் வெளியூர் வருவதற்கு உடல்நிலை இடம் தரும்வரையில் அவருக்கு அழைப்புகள் அனுப்பாதிருக்கும்படி கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அழைப்பை ஏற்றுக்கொள்ள வசதி ஏற்படும்போது, அறிவிப்பு கொடுப்பதாக அவர் செய்தி அனுப்பியுள்ளார்.

செயலாளர்—பிரசாரக்குழு தலைமை நிலையம்.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras—1